# அவசரக்கூட்டம்

**2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் அவசரக் கூட்டம் நகர் மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**தலைமை.திரு.ச.ஜெயமூர்த்தி, நகர் மன்ற தலைவர்,**
**கோட்டக்குப்பம் நகராட்சி**

## பொருள் எண்: 01

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, கோட்டைமேடு பகுதியில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21062/2023/SS2 நாள்.06.10.2023ன்படி மூலதன மான்ய நிதி & இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2023-24ன் கீழ் ரூ.85.50 இலட்சம் மதிப்பீட்டில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, இவ்வலுவலக ஆணையாளரின் செயல்முறை கடிதம் ந.க.எஎண். 656/2023/இ1 நாள். 14.11.2023ன் படி ARK Construction, திண்டிவனம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணியினை மேற்கொள்ளும்போது அப்பகுதி மக்களால் பணியினை தடுத்து நிறுத்தப்பட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.16282/2024 & WMP No.17817/2024ன் படி வழக்கு தொடரப்பட்ட நிலையில் 16.07.2024 அன்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்துக்கொள்ள தீர்ப்புரை வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணியினை மேற்கொள்ள கோரி 09.08.2024 மற்றும் 19.08.2024 ஆகிய தேதிகளில் ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டும் பணியினை தொடங்காத நிலையில் 22.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் என்பதை கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. எனவே குடிநீரின் அவசியம் மற்றும் பொது மக்களின் சிரமத்தினை கருத்தில் கொண்டு பணியினை மேற்கொள்ளும் பொருட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.656/2023/ இ1)

## பொருள் எண்: 02

கோட்டக்குப்பம் நகராட்சி 15வது நிதிக்குழு மான்ய (சுகாதார) நிதியின் கீழ் சர்வே எண். 300/10ல் புதியதாக நகர்புற சுகாதார மையம் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.35132/2022/EA-2 நாள்.16.11.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து நகர்புற சுகாதார மையம் அமைக்க 11.12.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 09.01.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|---|
| | | | மதிப்பீடை விட குறைவு | மதிப்பீடை விட அதிகம் |
| 1 | சின்ன கோட்டக்குப்பம் சர்வே எண்.300/10ல் நகர்புற சுகாதார மையம் அமைத்தல் | 120.00 | M/s. Meenu Industries PVT LTD 0.06% Below the Estimate | Muthusamy Construction 0.98% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதனை மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1547/2023/இ1)